அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் நகர பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்பேத்கர் அவர்களின் திருஉருவ சிலைக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்று பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார் இந்நிகழ்ச்சியில் க. திராவிட பக்தன், ஆர்.டி. ஆதிசேஷன், சேர்மன் உதயமலர்பாண்டியன் , சிலம்பு பன்னீர்செல்வம், கே.அரி கிருஷ்ணன், மோ.ரமேஷ், எஸ்.கே.ஆதாம், பொன். பாண்டியன் , தி.ஆ.கமலகண்ணன், டி.எம்.ரவி, எம்.பரசுராமன், ராஜேஸ்வரி கைலாசம், டி.கே.பாபு, டி.ஆர்.திலீபன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திருவெற்றியூர் மத்திய பகுதி சார்பில் முதல்வர் பிறந்தநாள் விழா பொது கூட்டம் பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் அமைச்சர் கோ.வி.செழியன் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதில் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, போடி காமராஜ், கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., மிசா. பா .மதிவாணன், தி.மு. தனியரசு வை.மா. அருள் தாசன், ஆறுமுகம், நிர்வாகிகள் நாகலிங்கம், வா. முத்துசாமி, டி .கரிகால சோழன் ,சாலை டி. கணேசன் .மூ. செல்வம், துர்கா கோதண்டம், வி.ஜி.தினகரன், ரமேஷ் குமார், செல்வம், எம்.எம்.செந்தில், எழிலன் சுதர்சன், கேபிள் கணேசன், உதயராஜ் ,வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ஜெயங்கொண்டம் தொகுதியில் – திருமானூர் – குருவாடியில் தொடங்கி

தா.பழூர் - திருபுரந்தான் - தென்கச்சி பெருமாள்நத்தத்தில் தடுப்பணைகள் கட்டிடுவீர்!

சட்டப்பேரவையில் – க.சொ.க.கண்ணன் பேச்சு!

சென்னை, ஏப்.18-

சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய ஜெயங்கொண்டம் தொகுதி கழக உறுப்பினர் க.சொ.க.கண்ணன், "ஜெயங்கொண்டம் தொகுதியில் - தா. பழூர், திருபுரந்தான், தென்கச்சி பெருமாள்நத்தம் ஆகிய 3 இடங்களி லும் தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

சட்டப் பேரவையில் க. சொ.க. கண்ணன் பேசியதா வது:

'தமிழுக்கும் அமுதென்று பேர்!-அந்தத்

தமிழ் இன்பத் தமிழ்எங் கள் உயிருக்கு நேர்'

நம் உயிரினும் மேலான தாய் மொழியாம் தமிழை வணங்குகிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, வங்கக் கடலோரம் உறங்கியும், உறங்காமலும் நம்மை வழிநடத்தும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

1964 இல் இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு, சிறை சென்ற மொழிக் காவலர், இந்த மாமன்றத்தின் முன்னாள் உறுப்பினர், எனது தந்தை

க.சொ. கணேசன் அவர்களையும், இந்த மாமன்றத்தின் முன்னாள் உறுப்பினர், மறைந்த பெரியவர் எஸ். சிவசுப்பிரமணியன் அவர்களையும் வணங்குகிறேன்.

மும்மொழியை ஏற்றால் தான் தந்திடுவோம் நிதி என்று முண்டாதட்டி கொக்கரித்துக் கூறிடுது நரி ஒன்று. செம்மொழியாம் தமிழ் தன்னை கொண்டிட்ட எங்களுக்கு மும்மொழியும் எதற்கையா என கூறிடுவோம் உங்களுக்கு. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்போ தீர்ப்பு. உன் மத்தர்க்கு அடித்திட்ட ஆப்போ ஆப்பு. மிச்சமீதி தீர்ப்புகளும் வருவதற்கு முன்னே மூட்டைக்கட்டி புறப்படுங்க அண்ணே, அண்ணே. நிதியினை தர மறுத்தேதான் விளையாடுது ஒரு கூட்டம். கருணா நிதியோட மகன் இவர் என்பதை மறந்து விளையாடுது அக் கூட்டம். நீதியின் வழிசென்று நிதியினைப் பெற்றிடுவோம். அன்புக்கு அடி பணிவோம். அடுக்கு முறைக்கு அடி பணியோம் என்று தமிழ்நாட்டைக் காத்து நிற்கும் நம் திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர்,

இருப்பாய் தமிழா நெருப்பாய்!
இருந்தது போதும் இதுவரை செருப்பாய்!
இருப்பாய் தமிழா நெருப்பாய்!
குட்டக் குட்ட நீ குனிந்தால் உலகத்தில்
குட்டிக் கொண்டேதானிருப்பான்–முரசு
கொட்டி எழடா உன் பகைவன் பிடரியில்
குதிகால் பட ஓடிப் பறப்பான்!

எனும் கவிஞர் காசி ஆனந்தனின் புரட்சி வரிகளுக்கேற்ப தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்க, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை இன்று இந்த மாமன்றத்தில் வழங்கியிருப்பது, தமிழ்நாட்டின் எதிரிகளுக்கும், விரோதிகளுக்கும் நெருப்பாய் இருக்கும். நமது திராவிட நாட்டின் பாதுகாவலர் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வணக்கத்தினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வீரச் செயலை விரைந்து ஆற்றும் வித்தகரே, மக்கள் கவலை நீக்கும் மதியோனே, முக்கனியே, முத்தமிழே, முத்தமிழறிஞர் கலைஞரின் முத்தான பேரனே, அரசியல் ஊர் வலத்தில் ஆர்ப்பாட்டமின்றி வரலாறு படைக்கும் எங்கள் இதய நிதியே, தமிழகத்தின் உடைமைகளைக் காக்க தாக்குதல் நடத்தும் அரிமாவே, சுய மரியாதைச் சுடரே, தமிழுக்குக் காவலனே, தகுதியான தலைமைக்குத் தக்க மைந்தனே, துணை முதலமைச்சர் அவர்களே, எங்கள் சின்னவரே உங்களுக்கு எனது வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களது மாவட்ட கழகச் செயலாளரும், போக்குவரத்துத் துறை அமைச்சருமான அண்ணன் எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களுக்கும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணை பொதுச் செயலாளர் அண்ணன் ஆ. ராசா அவர்களுக்கும், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர், எழுச்சித் தமிழர் அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கும், என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காள பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் என்னுடைய ஜெயங்கொண்டம் தொகுதி, த.பழூரில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கு அறிவிப்பு வெளியிட்டமைக்கு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும், நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அரியலூர் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது

வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மிகவும் பின் தங்கிய மாவட்டமான எங்களுடைய அரியலூர் மாவட்டம் தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. குறிப்பாக முதலில் முருங்கை ஏற்றுமதி மண்டலம், இரண்டாவதாக சிறுதானிய சிறப்பு மண்டலம். தற்போது அரியலூர் மாவட்டத்தை ஒருங்கிணைத்து தமிழ்நாடு முந்திரி வாரியம் அமைப்பதற்கு அறிவிப்பு வெளியிட்டமைக்கு முதல்வர் அவர்களுக்கும், வேளாண் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

1964-ல் இந்தி திணிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தன்னுடைய தேக்குமர உடலுக்கு தீயிட்டு, இந்தி ஒழிக, தமிழ் வாழ்க என்று கோஷமிட்டு, உயிர் நீத்த, ஐயா கீழப்பழூர் சின்னச்சாமி அவர்களுக்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரங்கம் அமைப்பதற்கு உத்தரவிட்டு அதற்கான பணி நடைபெற்று வருகிறது. அதற்கு நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் அரியலூர் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஜெயங்கொண்டம் தொகுதியில் பல்வேறு வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனைகள் நடைபெற்றிருக்கிறது, அதற்கு என் நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டத்திற்கு எடுக்கப்பட்ட 8,374 ஏக்கர் நிலங்களை அரசு, விவசாயிகளிடத்தில் திரும்பவும் ஒப்படைத்து இருக்கிறது. ஜெயங்கொண்டத்தில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் காலணி தொழிற்சாலை தொடங்கி 15 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். மாமன்னன் ராஜேந்திரன் சோழன் பிறந்த நாளை ஆடி திருவாதிரை அரசு விழாவாக அறிவித்திருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையில் இராஜேந்திரப்பட்டினம் முதல் ஜெயங்கொண்டம் வரை நான்கு வழிச் சாலை 190 கோடி ரூபாயில் அமைத்து தந்திருக்கிறார்கள். ஜெயங்கொண்டம் அரசு பொது மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி, 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, விரைவில் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது. தொல்லியல் துறையில் கங்கைகொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகம் அமைப்பதற்கு 22 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஜெயங்கொண்டம் அரசு கலை கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு 16.40 கோடி ரூபாய் வழங்கி பணி, நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஜெயங்கொண்டம் முழுநேர கிளை நூலகத்திற்கு 91 இலட்சம் ரூபாய் வழங்கி, கட்டடப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆண்டிமடம் ஒன்றியம் பெரியாத்துக்குறிச்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் வழங்கி, அதற்கு 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறையிலே பள்ளிக் கட்டடங்கள் 23.42 கோடி ரூபாயில் கட்டப்பட்டிருக்கிறது. நீர்வளத் துறையில் பாசன வாய்க்கால்கள், ஓடைகள் சிறப்பு மராமத்துப் பணிகள் 6.21 கோடி ரூபாய் மதிப்பில் நடைபெற்றிருக்கிறது. ஜெயங்கொண்டத்தில் புதிய கூடுதல் பேருந்து நிலையம் 2¼ கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜெயங்கொண்டத்திற்கு புதிய மின் செயற்பொறியாளர் அலுவலகம் பிரித்து வழங்கியிருக்கிறார்கள். நெசவாளர்கள் வாழ்வு மேம்பட ஜெயங்கொண்டம் செங்குந்தபுரத்தில் நெசவுப் பூங்கா அமைக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதேபோன்ற ஆதி திராவிடர் நலத் துறையில் அறிவு சார் மையம் அமைப்பதற்கு 77.89 இலட்சம் ரூபாய் மதிப்பில் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மீன்சுருட்டியில் ஆதி திராவிடர் நல விடுதி 3.72 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு, நேற்று நம்முடைய முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நான்கு ஆண்டுகளில் என்னுடைய தொகுதியில் முழுநேர நியாய விலைக் கடைகள், பகுதிநேர நியாயவிலைக் கடைகள், நகரும் நியாயவிலைக் கடைகள் என்று 21 புதிய நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டிருக்கிறது. 6 புதிய நியாயவிலைக் கடைகள் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி எல்லாத் துறைகளின் மூலமாக ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கு என்னுடைய ஜெயங் கொண்டம் தொகுதியில் மட்டும் பணிகள் நடைபெற்றிருக்கிறது. அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சித் துறையில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டமைக்கு நான், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாய்மொழியில் கல்வி கற்பது என்பது மிக சிறந்தது. அயல் மொழியில் கல்வி கற்பது என்பது ஒருவன் சொந்த காலில் நடப்பதைவிட பொய் காலில் நடப்பதற்கு சமம். சொந்தக் காலில் நடப்பதைத்தான் நாங்கள் திராவிட மாடல் என்கிறோம்.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்

தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந் தனரே;

என்ற புறநானூற்றுப் பாடலுக்கேற்ப நிலையில்லா புகழைப்பெற்று நிற்கும் பெயருக்கு உரியவராய் வாழ்ந்து கொண்டிருக்கும், தனது பேராற்றாலும், முயற்சியாலும் தமிழ்நாட்டின் வரலாற்றின் முத்திரை பதித்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். தமிழ் மொழியைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் அவர் ஆற்றிய தொண்டுகள் ஏராளாம். தலைவர் கலைஞர் இல்லையென்றால் இன்றைக்கு கணினி தமிழ் இல்லை, கணினியில் தமிழும் இல்லை என்ற நிலை உருவாகியிருக்கும். அண்ணா பல்கலைக்கழகத்தை சார்ந்த கல்லூரிகள் தமிழ் வழியில் பொறியியல் படிப்பை தொடங்கி, தமிழ் வளர்ச்சிக்காக அவர் கொண்டு வந்த முயற்சிகள் எண்ணில் அடங்காதவை. தமிழ் ஆசிரியர்களை தலைமையாசிரியர்களாக ஆக முடியாது என்ற நிலை இருந்ததை மாற்றி, தமிழ் ஆசிரியர்களை தலைமையாசிரியர்களாக மாற்றிக் கட்டியவர் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுத்தான் 2004 ஆம் ஆண்டு தமிழை மன்மோகன் சிங் அவர்களின் ஒன்றிய அரசு, தமிழை செம்மொழியாக அறிவித்தது. 2010 ஆம் ஆண்டு கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தலைவர் கலைஞர் அவர்களால் நடத்தப்பட்டது. ஜூன் திங்கள் 3 ஆம் நாளினை செம்மொழி நாளாக அறிவித்து இன்றைக்கு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் பயின்றால் பயனில்லை என்று இன்று சிலர் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அது மெய்யல்ல என்பதை இந்த அரசு தொடர்ந்து உணர்த்தி வருகிறது. மாணவர்களிடம் தமிழ்த் தொண்டின் பெருமையை உணர்த்திடும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை ஒரு கோடியே 88 இலட்சத்து 57 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவதற்காக ரூ.91.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சிறந்த நூல்களுக்கான ஆசிரியர்களுக்கு பரிசுத் திட்டம் ரூ.30,000/- லிருந்து ரூ.50,000/- ஆகவும், பதிப்பகத்தாருக்கு ரூ.10,000/- லிருந்து ரூ.25,000/- ஆகவும் இன்றைக்கு உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது. சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிக்கு ரூ.50 இலட்சம், டெல்லி தமிழ்ச் சங்கத்தில் கலை அரங்கத்தைப் புனரமைக்க ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ரூ.100/-ல் தொடங்கி இன்றைக்கு உதவித்தொகை ரூ.4,000/- ஆக வழங்கப்படுகிறது. அவருடைய மரபுரிமையருக்கு இன்றைக்கு ரூ.3,000/- வழங்கப்படுகிறது. தமிழ் மொழி, தமிழ் பண்பாடு பாதுகாக்க தொண்டு செய்தவர்களுக்கு மாதந்தோறும் மருத்துவப் படியுடன் ரூ.5,000/- வழங்கப்படுகிறது. அவருயடைய மரபுரிமையருக்கு ரூ.3,000/- வழங்கப்படுகிறது. தமிழறிஞர்களுக்கு பேருந்துகளில் கட்டணமில்லா பயணத்திற்கான சலுகை வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக ஆண்டுதோறும் 26 வகையான விருதுகள் வழங்கப்பட்டு, தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் வளர்ச்சித் துறையில் கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம், பக்கம் 69-ல் இளந் தமிழர் இலக்கிய பயிற்சிப் பட்டறை, இலக்கிய வினாடி-வினா, இளையோர் இலக்கிய பயிற்சிப் பட்டறை, தமிழால் முடியும்-வாழ்க்கை வழிகாட்டி பயிற்சி ஆகிய தலைப்புகளில் தமிழ் வளர்ச்சித் துறையில் கல்லூரி மாணாக்கர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டி மற்றும் இலக்கியம் குறித்து பயிற்சி அளிக்கப்படுவதுடன், போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோன்று, கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம், பக்கம் 86-ல் தமிழறிஞர்களின் நூல்களை உலக தமிழாராய்ச்சி நிறுவனம்மூலம் நாட்டுடைமை செய்யப்பட்ட நூல்களை அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகிறது. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், கவிஞர் வேழவேந்தன், முனைவர் திருநாவுக்கரசு ஆகியோருடைய 4,500 புத்தகங்களை அரசு அச்சிட்டு வழங்கி வருகிறது.

மொழிகள் அழியும் நாடுகள் பட்டியலில் இந்தியா முதலில் இடத்தில் இருக்கிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் மட்டும் 220 மொழிகள் அழிந்துவிட்டன என்று Central Institute of Indian Languages தெரிவிக்கிறது. 197 மொழிகள் அழியும் நிலையில் உள்ளன என எச்சரிக்கிறது UNESCO. தேர்தல் நேரத்தில் மட்டும் அடிக்கடி வந்து ஒரு திருக்குறளை சொல்லியும், உலகத்தின் மூத்த மொழி தமிழ் என்று பெருமைபட்டுக் கொண்டும், தமிழ் மொழிக்காக அத்தனையும் செய்பவர்போல் காட்டிக் கொண்டார் பிரதமர் மோடி அவர்கள். ஆனால், தற்போது அந்த மொழிக்கு குறைந்த அளவில் தான் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி இருக்கும் அதிர்ச்சி தகவல் வெளியாகியிருக்கிறது. மொழிகளுக்கு நிதி ஒதுக்குவதில் ஒன்றிய அரசு கடந்த பத்து ஆண்டுகளில் சமஸ்கிருதத்திற்கு 2,869 கோடி ரூபாயும், இந்தி மொழிக்கு 646 கோடி ரூபாயும், தமிழுக்கு வெறும் 100 கோடி ரூபாய் மட்டுமே வழங்கி தமிழ்நாட்டையும், தமிழ் மொழியையும் ஒன்றிய அரசு வஞ்சித்து கொண்டிருக்கிறது.

நம்முடைய முதல்வர் அவர்கள், இந்த ஆட்சி வந்ததற்கு பிறகு ஏழை குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் உயர் கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக புதுமைப் பெண் திட்டத்தைத் தொடங்கி 4.6 இலட்சம் மாணவர்கள் இன்றைக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெற்று பயனடைந்து வருகிறார்கள். தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் 3.80 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். இந்தத் திட்டத்தின்மூலம் ஏழை எளிய மாணவர்கள் உயர் கல்வி படிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ் வழியில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிப்பதால் நம் தமிழ் மொழி அழியாமல் தமிழ் மொழியிலே மாணவர்கள் படிக்கக்கூடிய நிலையை நம்முடைய முதல்வர் அவர்கள் உருவாக்கி தமிழை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

துறை சார்ந்த கோரிக்கைகளை தங்கள்முன் வைக்கிறேன். தமிழ் மொழிக்காக போராடி சிறை சென்ற தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம், மருத்துவப் படியுடன் ஐந்தாயிரம் வழங்கப்படுகிறது, அவருடைய வாரிசுக்கு மூன்றாயிரம் வழங்கப்படுகிறது. அந்தத் தொகை குறைவாக உள்ளது. எனவே, அந்தத் தொகையினை உயர்த்தித் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உரிய நடவடிக்கை தேவை!

தமிழ்நாட்டில் வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகள் கட்டாயம் தமிழில் வைக்க வேண்டுமென்று தொடர்ந்து நம்முடைய அரசு பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது. ஆனால், இதுவரை அது முழுமையாக அமல்படுத்தப்படவில்லை. எனவே, உடனடியாக அரசு அபராதம் விதிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய உரிமத்தை ரத்து செய்ய வேண்டும். உடனடியாக அதை அமல்படுத்துவற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் எங்கும் அறிவைப் புகட்ட நூலகம் திறப்பதுபோல், நம்முடைய முதல்வர் அவர்கள் உலகம் முழுக்க எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அந்த நாடுகளில் எல்லாம் உலகத் தமிழ் நூலகம் ஒன்றை திறக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை நகரிலுள்ள அஞ்சா நெஞ்சன் அழகிரி மணி மண்டபத்திற்கு பூங்கா மற்றும் கழிப்பிட வசதி செய்து தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் நிறை வேற்றப்பட வேண்டிய ஒரு சில கோரிக்கைகளை மட்டும் தங்கள்முன் வைக்கிறேன். அரியலூர் மாவட்டம் திருமானூர் தொடங்கி தா.பழூர் ஒன்றியம் வடவார்தலைப்பு வரை கொள்ளிடத்தில் 15-க்கும் மேற்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கொள்ளிடம் நீர் ஆதாரத்தை வைத்து ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட நிலங்கள் பாசனம் செய்யப்படுகிறது.

எனவே, திருமானூர், குருவாடியில் தொடங்கி தா. பழூர், திருபுரந்தான், தென்கச்சிபெருமாள்நத்தம் ஆகிய மூன்று இடங்களில் தடுப்பணை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோழகங்கம் எனும் பொன்னேரி மாமன்னன் இராஜேந்திர சோழனால் கட்டமைக்கப்பட்டது. 700 ஏக்கர் நிலம் உள்ள ஏரியாகும். இந்த ஏரியை புனரமைத்து, மறு கட்டுமானம் செய்து தருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஆண்டிமடம் மற்றும் தா.பழூரில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டிமடத்தில் புதிய மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் முதல் தா.பழூர் மதனத்தூர் வரை இருக்கின்ற சாலையை நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகம் வளாகத்தில் மாமன்னன் இராஜேந்திர சோழனுக்கு சிலை அமைத்துத் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்களை நான், தந்தை பெரியாராக, பேரறிஞர் அண்ணாவாக, அண்ணல் அம்பேத்கராக, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞராக இந்த அவையிலே பார்த்தேன். தற்போது விடுதலை வேட்கைக்கு வித்திட்ட மகாகவி பாரதியாராக பார்க்கிறோம் நாம்.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

அச்சமின்றி, எதற்கும் அஞ்சாமல், எவருக்கும் அடிபணியாமல் 2,000 கோடி ரூபாய் என்ன, 10 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் எங்களுக்கு மும்மொழி கொள்கை வேண்டாம் என தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பாக நின்று கொண்டிருப்பவர் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தினமும் சூரியன் வர விடியல் வரும், விடியல் இல்லாதோருக்கு விடியலாக இருப்பவரே! தீர்ப்பு கள் பல பெற்று நாட்டை வழி நடத்தும் தலைவனாய் உயர்ந்தவரே! மக்கள் இதயம் மகிழட்டும்; மகிழ்ந்து துள்ளட்டும்! தீது விளைவிப்போர் தீர்ந்து போகட்டும்! விடியல் ஒன்று மட்டுமே தமிழ்நாட்டில் தொடர்ந்து இருக்கட்டும் என்று கூறி, 2026-ல் வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு. தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும். வாழ்க தமிழ், வளர்க தமிழ்நாடு. நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. வட்டச் செயலாளர்கள் அவசர செயற்குழு கூட்டம் மாநகர பிரதிநிதி இரா.கந்தவேலு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி தமிழக முதல்வர் அவர்கள் கலைஞர் கைவினைத் திட்டத்தை துவக்கி வைக்க குன்றத்தூர் வருகை புரியும் நிகழ்ச்சிக்கு பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் 2000 மேற்பட்ட நபர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும். புதிய வாக்காளர் பட்டியலை வீடு வீடாக சென்று சரிபார்த்தல் பணியை விரைந்து முடித்து விட வேண்டும் என்றும். புதிய உறுப்பினர் சேர்க்கை படிவத்தினை உறுப்பினர்களை சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் பேரூர் கழக திமுக சார்பில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135–வது பிறந்த நாளை முன்னிட்டு பேரூர் கழகச் செயலாளர் க.சு.தமிழ் உதயன் தலைமையில் மீஞ்சூர் பேருந்து நிலையம் வள்ளுவர் வாசுகி திருமண மண்டபம் 3 வது வார்டு ஆகிய பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்றார் மாவட்ட கழக நிர்வாகிகள் பேரூர் கழக நிர்வாகிகள் வார்டு கழக செயலாளர்கள் கவுன்சிலர்கள் இந்நாள் முன்னாள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.